செ.வெ.எண்: 49 நாள்:27.01.2018

## பத்திரிகை செய்தி

## துப்புரவுப் பணியாளர்களின் நலன்காக்கும் "PROJECT NEW WINGS" திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

நகராட்சி மற்றும் ஊரக பகுதிகளில் திடக்கழிவு மற்றும் திரவக்கழிவு மேலாண்மையில் துப்புரவுப் பணியாளர்கள் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். இவர்கள் நகர மற்றும் கிராம உள்ளாட்சி அமைப்புகள், மருத்துவ மனைகள், உணவகங்கள் மற்றும் பிற தனியார் நிறுவனங்களில் பணியாற்றி வருகிறார்கள். துப்புரவுப்பணியாளர்கள் தங்கள் வேலை சூழல் காரணமாக பல்வேறு உடல் நலபாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். இப்பணியாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி பெற்று வேறு பணிகளுக்கு செல்லும் வாய்ப்பு குறைவாக உள்ளது. இந்நிலையை மாற்றும் பொருட்டு திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் "PROJECT NEW WINGS" என்ற ஒருங்கிணைந்த நலத்திட்டத்தை முன்னேடுத்துள்ளது. இத்திட்டத்தினை 26.01.2018 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல திருமண மண்டபத்தில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருவன:-

1. துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை உறுதிபடுத்தி அவர்களை குறைந்தபட்சம் பட்டப்படிப்பு வரை கற்க வைத்தல்.
2. மாற்று வேலை வாய்ப்புகளை பெறும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளித்தல்.
3. வங்கிகடன் மற்றும் பொருளாதார உதவிகளை பெற்றுத்தர தேவையான உதவிகளை மேற்கொள்ளுதல்.
4. துப்புரவுப்பணியாளர்களின் உடல் நலன் காக்கும் பொருட்டு மருத்துவ உதவிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல்,
5. துப்புரவுப் பணியாளர்களுகான சட்ட உதவிகளை வழங்குதல்.
6. அரசின் பல்வேறு நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களில் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் ஆகியவை "PROJECT NEW WINGS" திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திடத்தினை செயல்படுத்த துப்புரவு பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் விபரங்கள் சேகரிக்கப்படும். இதற்காக தகவல்கள் அளிக்கும் படிவங்கள் மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், நகராட்சி ஆணையர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் கிடைக்கும். இப்படிவங்களை பெற்று அதில் கோரப்பட்டுள்ள துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் தனி நபர் விபரங்கள், உடல்

நலன் தொடர்பான விபரங்கள், குடியிருப்பு வசதி குறித்த விபரங்கள், சமூக பாதுகாப்பு திட்ட விபரங்கள், தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி குறித்த விபரங்களை பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.

இதற்கான தகவல் சேகரிப்பு பிப்ரவரி 15 ம் தேதி வரை நடைபெறும். இதில் மாநராட்சி, நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் நிரந்தர மற்றும் தற்காலிக துப்புரவு பணியாளர்களும், மருத்துவ மனைகள், உணவகங்கள் போன்ற தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களும் தங்கள் விபரங்களை பதிவு செய்து கொள்ளலாம். தகவல் சேகரிப்புக்கு உதவி செய்யும் பொருட்டு தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தைச் சேர்ந்த களப்பகுதி வழிநடத்துனர்கள், சமுதாய அமைப்பாளர்கள் மற்றும் கிராம உதயம் தொண்டு நிறுவன தன்னார்வர்கள் ஒவ்வொறு பகுதிக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் துப்புரவுப் பணியாளர்களின் தகவல்களை பெற்று இணைதளத்தில் பதிவு செய்வர். தகவல் சேகரிப்பு பணிகள் முடிந்த பிறகு துப்புரவுப் பணியாளர்களின் விபரங்கள் பகுப்பாய்வு செய்யப்படும். அதன் பிறகு துப்புரவுப் பணியார்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான கல்வி உதவி, திறன் மேம்பாட்டு பயிற்சி, சுயதொழில் பயிற்சி, மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்படும்.

"PROJECT NEW WINGS" திட்டத்தை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் "மாவட்ட நிர்வாகத்தின் இப்புதிய முயற்ச்சிக்கு பணியாளர்கள் போதிய ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும், இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் துப்புரவு பணியாளர்களின் அடுத்த தலைமுறை வேறு வேலைவாய்ப்பின்றி மீண்டும் இதே பணியில் தொடராமல் மாற்று வேலை வாய்ப்புகளை உருவாக்கித்தருவது" என்று சுருக்கமாக விளக்கினார். இத்திட்டத்தில் பங்கு பெற்ற துப்புரவு பணியாளர் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கான திறன் வளர்பயிற்சியை வழங்க "ரெடிங்டன் திறன் வளர்பயிற்சி நிறுவனம்" ஆழ்வார்குறிச்சி மற்றும் ஐ.சி.ஐ.சி. திறன் வளர்பயிற்சி நிறுவனம் ஆகியவை முன்வந்துள்ளன. மேலும், பல நிறுவனங்கள் துப்புரவு பணியாளர்களின் நலன் காக்கும் இத்திட்டத்தில் இணைய உள்ளன. ரெடிங்டன் திறன் வளர் பயிற்சி நிறுவனத்தை சேர்ந்த திருமதி. சண்முக வடிவு மற்றும் ஐ.சி.ஐ.சி.யை திறன் வளர் பயிற்சி நிறுவனத்தை சேர்ந்த திரு. ஹரிகுமார் ஆகியோர் தங்கள் நிறுவனங்களில் வழங்கும் பயிற்சி குறித்து துப்புரவு பணியாளர்களுக்கு விளக்கினர். இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூமுத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஆ.பழனி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. ஹெட்சி லீமா அமலி, திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி. மைதிலி, மாநகர நல அலுவலர் மரு. பொற் செல்வன், மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல உதவி ஆணையர் திரு. பாஸ்கர்(பொ) மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.